07.07.2025

O.S. 242 / 2023 வா. சா. 1. வெள்ளைச்சாமி , த/பெ. மெய்யப்பன்

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நான் 1996–ம் ஆண்டு வெளிநாடு சென்றேன். நான் பிளம்பராக வேலை பார்த்தேன். நான் ஹல்ப் எரக்சன் கம்பெனியில் வேலை பார்த்தேன். நான் அபுதாபியில் வேலை பார்த்தேன். நான் எந்த வருடம் வெளிநாட்டு வேலையை முடித்துக்கொண்டு இந்தியாவில் நிரந்தரமாக தங்க ஆரம்பித்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை வெளிநாட்டில் வேலை பார்த்துள்ளேன். எனக்கு வெளிநாட்டில் கம்பெனியில் வேலை பார்த்ததற்கான செட்டில்மென்ட் அனைத்தும் 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு பிறகுதான் கிடைக்கப்பெற்றது என்றால் நான் வரும்போதே செட்டில் செய்துவிட்டார்கள். நான் 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு பிறகு வெளிநாடு செல்லவில்லை. நான் 2018–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளிநாட்டிலிருந்து இந்தியா வரும்போது என் கம்பெனி எனக்கு கொடுத்த செட்டில்மென்ட் தொகையை என் வங்கி கணக்கில் செலுத்தினேன். நான் அவ்வாறு எனக்கு வந்த செட்டில்மென்ட் தொகையிலிருந்துதான் வழக்கு மீதி கிரையத் தொகையை தயார் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளேன். மீதி கிரையத் தொகை ரூ.5,00,000/– ஆகும். விடுப்புச் சம்பளம் என்பது எனது கம்பெனியில் நான் ஊருக்கு வரும்முன்பே அட்வான்சாக பெற்று வரும் தொகையாகும். நான் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வருவதற்கு முன்பு விடுப்புச் சம்பளமாக ரூ.7,00,000/– வாங்கியுள்ளேன். நான் வெளிநாட்டிலிருந்து 06.06.2016–ம் தேதி இந்தியா வந்தேன். 2016–ல் எந்த மாதம், எந்த தேதியில் நான் வெளிநாடு சென்றேன் என்றால் சுமார் இரண்டு மாதங்கள் கழித்து சென்றேன். நான் 2016–ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்துவிட்டு 2016–ம் ஆண்டு ஜுலை மாதமே வெளிநாடு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விடுப்புச் சம்பளம் எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. என் வசம் தற்பொழுது 2018–ம் ஆண்டு வரையிலான அசல் கடவுச்சீட்டு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்பட்ட தூய சிட்டாவில் இரண்டு சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கண்ட எந்த சர்வே எண்ணைப் பொறுத்து வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் புல எண் 1770 ஆகும். புதிய புல

எண் 1770/1 –ல் கண்டு எழுதப்பட்டதா என்றால் சரிதான். 1770/2 கண்டு அந்த ஆவணத்தில் எழுதப்படவில்லை. அந்த சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை. இரண்டு ஏர்ஸ் இடத்திற்குத்தான் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் ஏர்ஸ் கணக்கு எனக்கு தெரியாது, ஆறு சென்ட் இடத்திற்கு ஒப்பந்தம் போட்டேன். புல எண் 1770/2–ஐப் பொறுத்து கிரையமும் பேசப்படவில்லை, விலையும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொல்லும் தேதியில் எந்தவொரு கிரையமும் ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் கண்ட சொத்திற்கு வா.சா.ஆ.1 தேதியில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு தெரியாது. யார் பெயரில் பட்டா இருந்தது என தெரிந்துகொள்ள முயற்சி எடுத்தேனா என்றால் முயற்சி எடுத்தேன். வழக்கு சொத்திற்கு தெற்கில் உள்ள சொத்து பிரதிவாதியின் கணவர் முத்து என்பவருக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. தெற்கில் உள்ள இடத்தில் என்ன உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்தை பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தவொரு கிரைய ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றாலும் நான் சொல்வதுபோல் விருப்பமாகவும், தயாராகவும் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.